# செய்திக் குறிப்பு
# மனோன்மணியம் சுந்தரனார் விருது

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் புதிதாக உருவாகி வந்த அனைத்து அறிவுத்துறைகளோடும் தொடர்பு கொண்டிருந்தவர் பேரா. சுந்தரனார். தத்துவ அறிஞராகவும், வரலாற்று அறிஞராகவும் தமிழியல் அறிஞராகவும் பெரிதும் மதிக்கப்படுபவர். தமிழ்த்தாய் வாழ்த்தைத் தந்தவர். அவருக்குப் பெருமை சேர்க்கும் வகையில் தமிழக அரசால் நிறுவப்பட்ட மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் ஒரு இலட்சம் மதிப்பில் தமிழறிஞர் ஒருவருக்கு அவர் பெயரால் விருதளித்து சிறப்பு செய்து வருகின்றது.

விருதுக்குரியவர் தமிழக அளவிலோ, தேசிய அளவிலோ, உலக அளவிலோ, மதிக்கப்படும் சிறந்த தமிழறிஞராகவோ. படைப்பாளியாகவோ, திறனாளியாகவோ, தொல்லியல் அறிஞராகவோ, அறிவியல் தமிழ் அறிஞராகவோ, கணினித் தமிழ் அறிஞராகவோ இருத்தல்வேண்டும். விருதுக்குரியவரின் நூல்கள், படைப்புகள், கட்டுரைகள், தரமிக்கவை என்ற நன்மதிப்பைப் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய மதிக்கத்தக்க ஒருவரை ஆர்வலர்கள் பரிந்துரை செய்யலாம். பரிந்துரை செய்பவர்கள் விருதாளியின் பங்களிப்பையும் தகுதியையும் குறிப்பிட வேண்டும். இப்பரிந்துரையைப் பல்கலைக்கழகப் பதிவாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி -12, என்ற முகவரிக்கு 10.06.2024 க்குள் அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றது.

30/4/24

பதிவாளர்